கந்தர் சஷ்டி கவசம்




# கழுதுமலைப் பத்து

## சிவசண்முக நாதன் இரங்கப் பத்து

தொகுப்பு :

கலாபூஷணம் நாகமணி விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கழுகு மலைப் பத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் தத்புருஷாய வித்மஹே
வக்ரதுண்டாய தீமஹி
தன்னோ தந்த ப்ரசோதயாத்

**துதி**

திருவாக்குந் செய்கருமங் கைகூடுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை

கந்தர் சஷ்டி கவசம்

# கழுகு மலைப் பத்து

## இரங்கல் பத்து அவனாசிப் பத்து

## கும்பிடு பத்து, கதிர்காம மாலை

*தொகுப்பாசிரியர்:*
**புலவர் நாகமணி விநாயகமூர்த்தி**

**ஈஸ்வரி**
**வெளியீடு - 09**
**சேனைக்குடியிருப்பு, கல்முனை.**
நான்காம் பதிப்பு: 15 - 08 - 2015

விலை: 125/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருப்புகழ்

தத்தத் தன தத்தத் தனதன
தத்தத் தன தத்தத் தனதன
தத்தத் தன தத்தத் தனதன - தனதானா

முத்தைத்தரு பத்தித்திரு நகை
அத்திக் கிறை சத்திச் சரவண
முத்திக் கொரு வித்துக் குருபர எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருளுவ தொருநாளே

தித்தித் தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப் பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாட

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் திரிகடக எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக் குகு குக்குக் குகு குகு
குத்திப் புதை புக்குப் பிடியென முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப் பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை

பாலன் தேவராய சுவாமிகள் அருளிய

# கந்தர் சஷ்டி கவசம்



## காப்பு

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும் நிஷ்டையும்
கைகூடும் நிமலர்அருள் கந்தர் சஷ்டி கவசம் தனை

## குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர்வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தமும் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர சரவண வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்றனை யாளும் இளையோன் கையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளியௌவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
புல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூ ண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்தநச்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகென
டிகு குண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வன்
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க்குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திரும்பல் முனைவேள் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விலங்கவேல் காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக்குதத்தை வடிவேல் காக்க
பணைத்துடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாழ் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள் வேல் காக்க
கைகளிரண்டும் கருணை வேல் காக்க
முன்கையிரண்டும் முரண் வேல் காக்க
பின்கையிரண்டும் பின்னவளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிற் கமலம் நல்வேல் காக்க
முப்பானாடியை முனைவேல் காக்க
எப்பொழுது மென்னை எதிர்வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவேவந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அணையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதநீங்கிச் சதுர்வேல் காக்க
காக்கக் காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினை நோக்கத்
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும் பகை அகல
வல்ல பூ தம் வலாஷ்டிகப் பேய்களும்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகடின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளி வாய்ப்பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக்கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணரும்
கனபூ சை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் செல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும் பாவைகளும்
பூ னை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதர் களெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதிங்கிட
செக்குச் செக்குச் செதிற்செதி லாகக்
சொக்குச் சொக்குச் சூர்ப்பகைச் சொக்கு
குத்துக் குத்துக் கூர்வடி வேலால்
பற்றுப் பற்றுப் பகலவன் றணலெரிப்
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் போர்தொடு நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூ ரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளுப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூ லைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பங்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத்துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சயனொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவனொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத் துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ளன்றாய்
என்னாவிருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவியன் பூதியை
நேச முடன்யான் நெற்றியிலணியப்
பாச வினைகள் பற்றதும் நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பால தேவ ராயன் பகர்ந்த கதையைக்
காலையின் மாலையிற் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுட னொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் மிதனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீ றணிய
அஷ்டத்திக் குள்ளோர் அடங்கலும்
வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோண் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடி பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலச்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு வந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்தாட்கொள் என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பாயுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றிக் கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணம் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

# கழுகு மலைப்பத்து



கழுகுமலை தனிலுறையும் முருக வேளே
கருத்துடனேயுன் பாத மலர்தானே ஓதப்
பழுதொன்றும் வாராமல் காக்க வேணும்
பச்சைமால் தன் மருகா பார்வதியின் மைந்தா
வழுவாமல் அடியேன்முன் நிற்க வேணும்
வரும்பிழைகள் தனை அகற்றி வழியே செய்வாய்
தெளிவாக வுன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

காடுதனில் வேங்கை மரமாகி நின்றாய்
கானவர்கள் கண்டுன்னைக் கடுவேகத்தால்
சாடிடவே மனதிலெண்ணிப் பரிசை கத்தி
தானெடுத்தார் தவிடுபொடியாக்க வென்று
கூடியே குறவரெல்லாம் நிமித்தங் கண்டு
குமரவேள் என்றெண்ணிக் குலைந்திட்டார்கள்
தேடியே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கிட்டாத பொருள்தனைப் போலென்னாளும்
கீர்த்தியுடனே இந்தப் புவியில் யானும்
எட்டி எட்டியே உன்னைப் பார்க்கும் போது
ஏமாற்றி என்னை விட்டேகலாமோ
சட்டமுடன் தோகை மயில் மீதிலேறிச்
சடாட்சரமாய் என்முன்னே தோற்றவேணும்
திட்டமுடன் உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கீர்த்தியுடனேயிந்தப் புவியில் யானும்
கிருபையுடன் உன்பதியைத் தேடிவாறேன்
பூத்தமலர் போலவுன்னைக் காண்பதெப்போ
புண்ணியனே எனக்கு வரம் தருவதெப்போ
வார்த்தையொன்றுமுரையாயோ வள்ளிவாழ்வே
வந்துனது சன்னிதியில் மனதன்பாகச்
தீர்த்தங்கள் ஆடி உன்னைத்துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவலயத்தில் அடியேன் நான் செய்த பாவம்
குற்றமெலாம் பொறுத்துனது குழந்தையைப்போல்
கவலையற்று வாழ்ந்திருக்க கருணை தந்து
காப்பதுவுன் செயலல்லோ கார்த்திகேயா
சவலை இளம் கன்றுதன் தாயைத்தேடி
தயங்கிறது போலேயான் தியங்கலானேன்
சிவலை நிறமார்பழகா செந்தூர்க்கந்தா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கூடியே மறலிஎன்னைப் பிடியாவண்ணம்
கொடுநரகிலே யானும் வீழ்ந்திடாமல்
வாடியே மனம்மெலிந்து போகாவண்ணம்
மாகவே உன்னுடைய கீர்த்தி தந்து
பாடியே பவனொளிபவாயமென்றால்
பறக்குமே பசாசுமுதல் ஏவல் தானும்
தேடியே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கெடுதி உள்ள சூரர்தனைவதையே செய்தாய்
கிளிமொழியாள் வள்ளிதினைப்புனத்திலே தான்
படிமீதில் தான் பெரிய பண்டாரம்போல்
பாசிபற்றிய பல் பழுத்த கிழவனாகித்
தடியூன்றித் தண்டுக மண்டலமும் கொண்டு
சாஸ்டாங்க மாய்க் குறவர்க் கெதிரே சென்றாய்
தேடியே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கேசவனார் மருகோனே நீசெய்கோலம்
கெடிதான குமரகுரு வேடனாகித்
நேசமுடன் கையில் வில் அம்புங் கொண்டு
நிமிஷமுடன் வள்ளிதினப்புனத்திலே தான்
பாசமுடன் பெண்ணே கண்ணே என்று
பண்புடைய வள்ளியை நீ பாகம் செய்தாய்
தேசமெல்லாம் திரிந்தலைந்தேன் உன்பாதம் காணச் - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிலே கோழிக் கொடியும் வேலும்
வள்ளிதெய்வானையுடன் மயில் மீதேறித்
தைய நல்லாள் தீபதூ பம் பிடிக்கத்
தாதியர்கள் இருபுறமும் கவரி வீச
மெய்யுடனே ஆறுமுக ரூபமாகி
வேலவனே வந்தெனக்குவிடைகள் தாரும்
தெய்தெய்யஎன் றுன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கொன்றைமலர் வேணியனே உனக்குத் தானே
குழந்தையாய் வந்துதித்த குமரவேளே
அண்டரெல்லாம் முனைக்காண வேண்டியிங்கே
அபயமென்று கையேந்தி அணுகி நிற்பார்
தண்டை கிண்கிணி காலில் சதங்கை கொஞ்சத்
தானோடிவந்துனது ஒளியைக் காட்டும்
தெண்டனிட்டே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கோதையர்கள் இருபுறமும் கவரி வீச
குளிரான மதிமுகங்கள் ஆறும் துன்னக்
காதலுடன் பன்னிருகை வேலுந்துன்ன
கானமயில் மீதேறும் கார்த்திகேசா
வாதுடனே யசோதையன் றன்சிரசந்தன்னை
வடிவேலால் நீறு செய்த வானோர் கோவே
சீதமருகோனே உன் புகழைச்சொன்னேன் - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கவ்வியே பூதமென்னைப் பிடியாவண்ணம்
காத்துனது கிருபை தந்து ரட்சியுமையா
வவ்வியமெய்மறந்து மொருபசாசுதானும்
பவனொளி பவாய வென்றால் பறந்திடாதோ
ஒவ்வியே எனைச்சூழும் லாடன்மாடன்
ஓம் நமசிவாயமென்றால் ஓடிடாதோ
செவ்வையாய் உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

இக்கணமே இதுநல்ல வேளையையா
இதோ பாரும் சன்னிதியில் திருவிழாவை
வணக்கமுடன் கற்பூரமடவிளக்கு
வாகைவகையாய்க் கன்னியர்கள் ஏந்திநிற்க
எக்காளம் பேரிகையும் தம்பூர் மேளம்
இடியெனவே எத்திசையும் முழங்கி நிற்க
சிக்கணமே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

- சுபம் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவசண்முகநாதன் இரங்கல்பத்து



1 அன்றமர் அடைந்த துயர்தீர்க்கவென்று
ஆறுமுகனார் அவதரித்தார் அசுரர் கூட்டம்
கொன்றொழித்தாய் குருவாகித் தந்தையர்க்கு
கூறினார் ஓங்காரப் பொருளை அண்ணல்
வென்றெடுத்த மாங்கனிக்காய் ஆண்டியாகிப்
மேவினாய்ப் பழனி மலை வேலா வுன்னை
இன்றெமது துயரங்கள் தீர்த்தே இன்பம் சுவாமி
எய்திட்டு அடியார்க்கு இரங்குவாயே

2 தீயவனாம் அசுரனுக்கு அருளைக் காட்டித்
திருக்கோல வடிவுடனே வனத்தில் சென்று
மாயவனார் மகளான வள்ளியம்மை தன்னை
மணம் கொண்டாய் வாழுநெறி தவறிக்கெட்டு
நோயுடைய அருணகிரிக் கந்த நோயை
நீக்கினாய் பழவினை யோடிங்குவாழும்
சேயெனின் துயரங்கள் தீர்த்தே செவ்வேள் சுவாமி
உன் திருப்பாதம் சேர்வதற்கு இரங்குவாயே

3 குன்றமெல்லாம் குடிகொண்டாய் அகத்தியர்க்கு
குருவாகி உபதேசம் செய்தாய் காஞ்சி
சென்று கச்சியப்ப னுரை நூலிற் குற்றம்
திருத்தினாய் சபையில ரங்கேற்று வித்தாய்
அன்று பூதம் பிடித்தே அடைக்கக் கீரன்
அழைக்கவே அனுக்கிரகம் செய்து காத்தாய்
என்றுமுனைச் சரவணனே மறவோம் ஐயா சுவாமி
இன்னல் தீர்த் தருள்வதற்கு இரங்குவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 அன்னை தந்தவேல் வாங்கி அசுரர் தம்மை
அழித்திட்டாய் அமரர் துயர் தீர்த்தாய் அங்கு
மின்னனையாள் தேவமகள் தன்னைத் தேவர்
விருப்பமுடன் திருமணம் புரிந்து மீட்சிபெற்றாய்
கன்னிமொழிப் புலவனுடன் வாது பேசி
களிகொண்டு விளையாடிக் கருணை காட்டி
இன்னும் இடர் துயர் தாங்கோம் இறைவா உன்பால் சுவாமி
எடுத்தணைத்து அடியார்க்கு இரங்குவாயே

5 அன்னையராம் அவ்வையர்க்கு பழமொன் றீந்தாய்
அருளுருவம் காட்டினாய் இடும்பனுக்கு
முன்னை வல்வினை நீக்கியருட் காட்சி தந்தாய்
முனிவனாம் குமரகுரு பரனையாண்டாய்
பன்னிருகை கொண் டுலகைப் பராமரிப்பாய்
பரிந்திரங்கும் சண்முகனே அடியேன் நாங்கள்
இன்னும் மிகத்திங்கு துயர்தாங்க மாட்டோம் சுவாமி
எங்கள் மேல் அன்பு கொண்டு இரங்குவாயே.

6 பழிவுடைய பாழ்வாழ் விலகப்பட்டுளன்று
பரிதவிக்கும் உயிர்களுக்கு இரங்கும் தேவா
மழையனைய கருணையினால் மாந்தர் செய்யும்
மகா பாதகங்கள் தீர்த்தருளும் வடிவம் நீயே
இழிவுமிக அடைந்துவிட்டோம் மிரங்கா தென்னில்
இன்னும் மிகப் பழி தேடி இறக்கவோ நின்
ஒளிர்கின்ற கருணையதிற் சிறிதுதந்தே ஓம் சண்முக நாதா
ஓடிவந்து தடுத்தாட் கொண்டிரங்குவாயே

7 கண்ஈராறுடைய திருமுருகா குகா உந்தன்
கருணை மழையிலொரு துளி இவ்வேழைக் கீந்தால்
மண்ணுலகம் மாறிவிடு மென்றோ இன்னும் நீர்
வழங்குதற்கு என்மீது வன்மை ஈதோ ஐயா
எண்ணாத நாளில்லை ஏழை உம்மைக் கந்தா
ஏன் இன்னும் தாமதமோ இரப்போர்கீயும்
தன்னொளி சேர் சரவணனே நாள் தள்ளா தென்னைச் சுவாமி
தாங்கிக் கொள் அருணகிரிக் கருளுமாறே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 மண்ணுலகில் மீதமுள்ள வாழ்நாட் கழிய
வகையேனும் கனவில் வந்தருளா தென்னில்
எண்ணாத எண்ணமெலாம் எண்ணி நாயேன்
இடர்கடலில் வீழ் துழர்வேன் ஏக்கத்தாலே
புண்ணாகி மனம் நொந்து வெறுப்புக் கொண்டு
புறம் பாயப் பார்க்கின்றதே எனது உள்ளம்
மண்ணுலகோர் எனைக் கண்டு நகையா வண்ணம் சுவாமி
மன்னவனே சடாட்சரனே இரங்குவாயே

9 எண்ணரிய பிறவியதை எமக்குத் தந்தாய் யானும்
இதைப்பற்றி அறிந்திடவோ தவறி விட்டேன்.
மண்ணுலகில் உழல்வதற்கு பயன் பெறாது
வருந்துவதோ நொந்தழவோ மடியவோ என்
எண்ணமெல்லாம் நீயறிவாய் எம் ஈடேற்றத்திற்கு
இரங்குவாய் என நம்பி உறுதி கொண்டேன்.
விண்ணவனே என்விண்ணப்பம் கேட்டு மின்னும் சுவாமி
வீணில் நாள் கடத்தாது இரங்குவாயே

10 மற்றவர்க்குத் தொல்லை தரா வாழ்வதற்கு
வகை எனக் கருளினால் நன்மையாகும்.
கற்ற கல்வி வித்தையெலாம் உதவுதற்கு
கடையேனின் விதியிலேன் அறிவை நீயே
பற்றுத் தான் குறைவெனினும் கடமை உண்டு
பார்ப்பவர்கள் என்மீது பழி சொல்லாரோ
ஏற்றென்னை அன்னையர் போல் கருணை காட்டி சுவாமி
இத்தருணம் சண்முகனே இரங்குவாயே

11 மனம் தனிலும் ஆர்வமுண்டு மெனினுமென்னை
வாழவிடா விதிப்பயனால் வருத்தி மேலும்
தினம்தினமும் புதிய பலதாக்கம் வந்து என்
சித்தமதைத் தடுமாற வைப்பதாலே
நினைந்து நினைத்தேங்கியே கெடட்டுமென்று
நின்றனையும் கைவிட்டனையோ என்று நொந்தேன்.
எனக்கிரங்காய் என்று உனை வேண்டுகின்றேன் சுவாமி
இளையோய் சிவ சண்முகனே இரங்குவாயே

சுபம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
வேலும் மயிலும் துணை

# அவனாசிப்பத்து

வற்றாத பொய்கை வள நாடு கண்டு
மலை மேலிருந்த குமரா
உற்றாரெனக்கு வொரு பேருமில்லை
உமையாள் தனக்கு மகனே
முத்தாடை தந்து வடியேனை யாளு
முருகேச ரெந்தன் மனத்தே
வித்தாரமாக மயில் மீதிலேறி
வரவேணு மென்றனருகே!

ஆலால முண்டோன் மகனாகி வந்து
வடியார் தமக்கு முதவி
பாலூரமுதுண்டு கனிவாய்த் திறந்து
பயனஞ் செழுத்தை மறவேன்
மாலான வள்ளி தனை நாடி வந்து
வடிவாகி நின்ற குமரா
மேலான வெற்றி மயில் மீதிலேறி
வரவேணு மென்ற னருகே!

திருவாசல் தோறும் மருள்வேத மோத
சிவனஞ் செழுத்தை மறவேன்
முருகேச ரென்றுமடி யார் தமக்கு
முதலாகி நின்ற குமரா
குருநாத சுவாமி குலமாது நாதர்
குமரேச ரென்ற பொருளே
மறவாமல் வெற்றி மயில் மீதிலேறி
வரவேணு மென்றனருகே!

உதிரந்திரண்டு பனியீரலுண்டு
டுரு வாசல் தேடி வருமுன்
ததி போலெழுந்த திருமேனி நாதர்
கடை வீடு தந்து மருள்வாய்
முதிரஞ் சிறந்த வயல்வீறு செங்கை
வடிவேலெடுத்த குமரா
கதிராய் நடந்து மயில் மீதிலேறி
வரவேணு மென்றனருகே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணாடு மீசன் மகனாரையுந்தன்
மலை வீடு தந்து மருள்வாய்
வண்டூரல் பாயும் வயலூரில் செங்கை
வடிவே லெடுத்த குமரா
நன்றாக வந்துயடியேனை யாண்டு
நல்வீடு தந்தகுகனே
கொண்டாடி வெற்றி மயில் மீதிலேறி
வரவேணு மென்றனருகே!

நீலங்சிறந்த குறமானது வள்ளி
நின் பாகம் வைத்த குமரா!
காலனெழுந்து வெகுபூசை செய்து
கயிறு மெடுத்து வருமுன்
வேலும் பிடித்து வடியார் தமக்கு
வீராதி வீரருடனே
சாலப் பரிந்து மயில் மீதிலேறி
வரவேணு மென்றனருகே!

தலைகட்ட நூலின் நிழல்போல நின்று
தடுமாறி நொந்து மடியேன்
நிலை கெட்டுயானும் புவி மீதில் நின்று
நெடுமூச்செரிய விதியோ

அலை தொட்ட செங்கை வடிவேற் கடம்பா
வடியேனையாளு முருகா
மலையேறி மேயு மயில் மீதிலேறி
வரவேணு மென்றனருகே!

வண்டுண்டு பூவில் மதுவூரல் பாயும்
வயலூரில் செங்கை வடிவேல்
கண்டொன்று சொல்லித் திரிவார்கள் வாசல்
கடனென்று கேட்ட விதியோ
வண்டூறு பூவிலிதழ் மேவு வள்ளி
தெய்வானைக் குகந்த வேலா
நன்றென்று சொல்லி மயில் மீதிலேறி
வரவேணு மென்றனருகே!

விட தூதரோடி வரும் போது வும்மை
வெகுவாக நம்பினேனே
குறமாது வள்ளி யிடமாக வைத்து
மயிலேறி வந்த செல்வா
திடமாகச் சோலை மலை மீதில் வாழுந்
திருமால் தனக்கு மருகா,
வடமான பழனி வடிவேல் நாதா
வரவேணு மென்றனருகே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கார சக்தியுமை பால் குடித்து
உபதேச முரைத்த பரனே!
பூங்கா வனத்திலிதழ் மேவும் வள்ளி
புஜம்திருந்த குகனே
ஆங்கார சூரர் படை வீடு சேர
வடிவேல் எடுத்த பூபா
பாங்கான வெற்றி மயில் மீதிலேறி
வரவேணு மென்றனருகே!

ஆறாறுமாறு வயதான போது
வடியேன் நினைத்த படியால்
வேறேது சிந்தனை நினையாமலுந்தன்
உபசாரசங்கமருள்வாய்
அசுரேசர்போ லேயமதூத ரென்னைக்
கூட்டோடு கட்டவருமுன்
மாறாது தோகை மயில் மீதிலேறி
வரவேணு மென்றனருகே!

கையார வுன்னை தொழுதேத்த மனது
கபடேது சற்று மறியேன்
ஐயாவுனக்காளாகும் போது
வடியார் தமக்கு மெளியேன்
பொய்யான காய மறிவேயொடுங்கி
உயிர் கொண்டு போக வருமுன்
வையாளியாக மயில் மீதிலேறி
வரவேணு மென்றனருகே!

ஏதேது ஜென்ம மெடுத்தேனோ முந்தி
இந்த பிறப்பிலறியேன்
மாதாவும் தந்தை நீ மாதவன் தனக்கு
மருகா குறத்தி கணவா
காதோடு கண்ணை யிருளாக மூடி
உயிர் கொண்டு போக வருமுன்
வாதாடி நின்று மயில் மீதிலேறி
வரவேணு மென்றனருகே!

- அவனாசிப்பத்து முற்றிற்று -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காம வேலவர் பதிகம்

ஏர்பூத்த மெய்யன்பர் உள்ளத் சிலர்பிரெளு
இரவிநிக ராறுமுகமும்
இருவினைக் காடெரித் தருள் அமுத மழை பொழியும்
ஈராறு கமல விழியும்
கார்பூத்த பாசவிருள் கடியுமிள முறுவலும்
கனக குண்டல நிரைகளும்
கதிர் ஒளி நெறிக்கும் நவரத்தின மணிமகுடம்
களிழகும் மகலமார்பும்
தார் பூத்த பன்னிரு புயாசமும் மிடர்நீக்கு
சக்தி வடிவேலும் மனைமார்
சாருமிரு பாகமும் பாத தாமரையும்மாச்
சண்டப்பிர சண்ட மயில் மேல்
சீர் பூத்த கருணையுரு வங்காட்டி விழிமாச்
திர்த்தெனக் கருள் செய்குவாய்
தென்கதிரை மலை வேலர் அன்பர் மகிள்னுகூலர்
செந்தியம் உமை பாலனே

மன்னுயிரின் நீவைத்த வெல்லைக்கடங்காத
வான் கருணை ஆறு பெருகி
மாணிக்கக் கங்கையாய் வினை மரமுறித்து எம்
மாயைமுத லறவரித்து
முன்னுயிர்க் களிருங்மலங் கழுவிக் கருங் குழியை
மூடிக் களைப்பகறி
முத்திக் கரைக்கே விடுமன் பரந்நதியின்
மூழ்கியிரு விழி சிறக்க
என்னுயிர்க் குயிரே தெவிட்டாத வின்பமே
யின்பத்தில் லெய்த சுகமே
என்றென்னு பாடியுன் அருள் வடிவு கண்டுளம்
இனிக்கின்ற நாளெந்தநாள்
சின்மைய சொரூபனே குன்று தோறுறாடல் புரி
தெய்வமே யுனை நம்பினேன்
தென்கதிரை மலைவேலர் வன்பர்மகிழனுகூலர்
செந்தியம் உமைபாலனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ சண்முகா

# கதிரைமலைப் பேரின்பக் காதல்

ஆரணஞ் சேர் தென்கதிரை யற்புகழைப் போற்றி செய்து
காரணமாய்ப் பேரின்பக் காதலதைக் கூறலுற்றேன்

பிறந்த பிறப்பெல்லா நான் பேதலித்துச் சண்முகனை
மறந்தே மறந்துபட்ட மாற்றமிங்கி சொல்லலுற்றேன்

கந்த மலர் தென்கதிரைக் கந்தனை நான் போற்றாமல்
பந்தவினை இன்பசுகப் பாசத்திற் பட்டுவிட்டேன்.

முக்தி கொடுக்கு மலை மூவுலகும் போற்றுமலை
சித்தி ~~பொருந்து~~ அருளு மலை தென்கதிரை மாமலையே / அருளு

வாழுங் கதிரை மலை வள்ளலை நான் போற்றி செய்து
நீளும் பவக்கடலை நீந்தவறிந்தேனிலையே

நொந்தடியேன் சிந்தை நுடங்கும் போதென்தன் முன்னே
வந்துதவ வேணுமினி வாழ்கதிலை வேலோனே

திருந்தும் புவியிற் சீவர்களையீ டெற்றுகின்ற
மனதுக்கனிந் திரங் ~~மருந்து~~ கனிந்திரங்கேனம்மா வள்ளியம்மைத் தாயாரே — மனதுகனிந்

இரும்பனைய நெஞ்சனியா னீடேற நீ கடைக்கண்
நீ கடைக்கண் திரும்பி முகம் பாரேனம்மா / தாயாரே - தெய்வானை

அ — அழுதழுது நானுரைத்த ~~தி~~ அல்லலெல்லாம் வேவர்க்குக்
தொழுது நின்று மெல்ல மெல்லச் சொல்லும்மயில் வாகனமே — ம்

குன்றெறிந்த வேலோய் கோலமலர்ச் சேவடிகள்
என்று மறவாம லிருக்கும்வரந் தாருமையா

மிடிமைத் துயரால் மெலியாம லெப்பொழுதும்
அடிமை உனக்கே நான் ஆண்டிருக்கஞ் செய்வாயே.

ஆ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காம மாலை

## விநாயகர் துதி

ஆனைமுகனே அருமறையின் முன்னவனே
தானாக நின்ற தனிமுதலே கற்பகமே
வானோர்கள் தான் துதிக்கும் வள்ளலே உன்னிருதாள்
நானோர் நிமிடம் மறவாது நன்னருள் தா

### மாலை

நித்தமுனைத் துதிக்கச் சுப்பையா நீனிலத்தோர் கொண்டாட
பத்துலட்ஷங்கோடி தமிழ் சுப்பையா பாடவரமேயருள்வாய்
அத்தனருள் குமரா சுப்பையா ஆயோன் மருகோனே
கர்த்தனே யெங்கள் கண்டிக் கதிர்காம வேலோனே 1

அனுதினம் உன்னை நினைத்து சுப்பையா அடியேனுமீடேற
உந்தன் மலர்ப்பதத்தை சுப்பையா உகந்தேனக் கருள்வாய்
மனதிலும் வாக்கினிலும் சுப்பையா வஞ்சகமில்லா தடியேன்
கனவிலும்நான் மறவேன் கண்டிக் கதிர்காம வேலோனே 2

வாக்குமனது மொக்கச் சுப்பையா வண்மையுடன் நின்பதத்தை
ஏற்கும் அமரோனே சுப்பையா எல்லோர்க்கும் நாயகனே
ஆர்க்கும் பெரியோனே சுப்பையா அமரர் சிறைமீட்டவனே
காக்கும் பெருமானே கண்டிக் கதிர்காம வேலோனே 3

வில்லாலடித்து சுப்பையா விஜயனுக்கு பாசுபதம்
வல்லாயுதங் கொடுத்த சுப்பையா மகாதேவர் புத்திரனே
எல்லோர்க்கும் நல்லபிரான் சுப்பையா என்றென்றும் எப்பொழுதும்
கல்லோதான் உன் மனது கண்டிக் கதிர்காம வேலோனே 4

பாலார நெய்யாரச் சுப்பையா பரதேசிக் கன்னமிட
கோலாகலக் குமரா சுப்பையா கோவே உனைத் தொழுதேன்
வேலாயுதனே சுப்பையா விளக்கும் திருத்தண்டை
காலாயுதக் கொடியோன் கண்டிக் கதிர்காம வேலோனே 5

நீயிருக்கத் தெய்வானை சுப்பையா நினைவிருக்க வள்ளியம்மை
தாயிருக்க சேயிக்கு சுப்பையா தவிப்பு வருவானேன்
மங்கை வள்ளி பங்காளா சுப்பையா மயிலேறும் சுப்ரமண்யா
கங்கை வளநாடா கண்டிக் கதிர்காம வேலோனே 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லடா நீயே சுப்பையா துணையாக வந்தெனக்கு
வெல்லடா வேல்முருகா வேண்டும் வரம் தருள்வாய்
அல்லடா சொல்லுகிறேன் சுப்பையா ஆனாலும் உன்புதுமை
கல்லோடா உன் மனது கண்டிக் கதிர்காம வேலோனே 7

மீண்டும் சமர்க்களத்தில் சுப்பையா மென்மேலும் கைகலந்து
மாண்டப்பெருஞ் சூரர்களை மாய்த்த வடிவேல்முருகா
தெண்டித் தமரர் செய்த சுப்பையா சிறைமீட்ட சேவகனே
கண்டி வளநாடா கண்டிக் கதிர்காம வேலோனே

காலாலுதைத்துச் சுப்பையா பகா சூரனையே வதைத்து
சேனாடு காத்தருளும் சுப்பையா செங்கை வடிவேலோனே
பூ ணாரம் பூண்ட உன் பொற்கமலச் சேவடியைக்
காணாத கண்ணென்ன கண்டிக் கதிர்காம வேலோனே 9

பட்டுடையும் ஒப்பனையும் சுப்பையா பாசாங்கு தாள் வடமும்
இட்ட சவுக்களியும் சுப்பையா இலங்கு முகம் ஆறும்
சத்துருக்கள் யாவரையும் சுப்பையா தவிடுபொடியாக்கிடுவாய்
கர்த்தனே எங்கள் கண்டிக் கதிர்காம வேலோனே 10

பாலன் வருந்துவது சுப்பையா உன் பாரமலை கேட்கலையோ
வேலாயுதம் பிடித்த எங்கள் மெய்ஞ்ஞான தேசிகனே
மலைககு மலைநடுவே சுப்பையா மலையாள தேசமெல்லாம்
அதட்டி சிறையெடுக்கும் எங்கள் ஆறுமுக தேசிகனே 11

என்னுடைய கவலை தன்னை சுப்பையா ஈடேற்ற வேணுமையா
பண்ணு தமிழ்பாடி சுப்பையா படிக்க வரமேயருள்வாய்
அன்னை உமை மகனே சுப்பையா ஆயோன் மருகோனே
கன்னல் மொழி வள்ளி பங்கா கண்டிக் கதிர்காம வேலோனே 12

இல்லையோ நீ தெய்வம் சுப்பையா இருந்தாலிரங்காயோ
கருங்கல்லையோ நான் தொழுதேன் கண்டிக் கதிர்காம வேலோனே
கல்லையாவுன் மனது சுப்பையா கலங்காத வைரமதோ
சொல்லையா வாய்திறந்து துரைப்பழனி அய்யாவே 13

பாக்குத்தா வெற்றிலைதா சுப்பையா பாலமிர்தம் சக்கரைதா
வாக்குத்தா கந்தா மலை பழனி ஐயாவே
வந்தவகையுரைத்து என் வாய் மொழிக்கு சேதி சொல்லி
சிந்தை கலங்காமல் திடவார்த்தை சொல் முருகா 14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தப்பா வேலா சுப்பையா கடம்பாவுனைக் தொழுதேன்
இந்தப்பாடு யார் படுவார் சுப்பையா ஏழைக்கிரங்குமையா
வந்தவினை தீர்க்கும் சுப்பையா வடிவேலா சுப்பிரமணியா 15
கந்தா கடம்பா கண்டிக் கதிர்காம வேலோனே

முன்னடிமை பின்னடிமை சுப்பையா மூவேழும் முன்னடிமை
என்னடிமை கொண்ட எங்கள் ஆறுமுக தேசியனே
கொத்தடிமை கொடியடிமை எங்கள் குலம் ஏழும் உன்னடிமை 16
கந்தா நான்உன்னடிமை கண்டிக் கதிர்காம வேலோனே

ஆண்டவனே நீயாகிச் சுப்பையா அடியவனும் நானாகி
மூண்டு வரும் வல்பிணி நோய் முன்விலகிப் பொய்விடுமே
சுத்தனே ஞானச் சுப்பையா சுடரே சுடர்க்கொழுந்தே 17
கர்த்தனே எங்கள் கண்டிக் கதிர்காம வேலோனே

உன் பாதம் துணையெனவே சுப்பையா உறுதியுடன் நம்பும் எந்தன்
சிந்தை கலிதீர செல்வம் எனக்கருள்வாய்
தித்தா வென்றாடும் சுப்பையா சிவன் மகனே தேவர் தொழும்
கந்தா கடம்பா கண்டிக் கதிர்காம வேலோனே

அறையில் கிளி வளர்த்து சுப்பையா அம்பலத்துக்குள்ளாக்கி
தெருவில் விடச்சம்மதமோ தென்பழனி வேலோனே
எவ்வளவு நாழிவந்து சுப்பையா இரங்கி முகம் பாருமையா 19
கள்வரை வேரறுக்கும் கண்டிக் கதிர்காம வேலோனே

உன்னைவிட தெய்வம் சுப்பையா உலகினில் வேறுமுண்டோ
அன்னையும் நீ தந்தையும் நீ என்னை ஆதரிக்க வேணுமிப்போ
தாயில்லாப் பிள்ளைபோல் சுப்பையா தரணி தனில் யானிருக்க 20
நாயேன் படுந்துயரம் கண்டு நாடிவர வேணுமிப்போ

ஈராறு காதிருந்தும்சுப்பையா என்சொல் கேளாததென்ன
பேராறு சூடு பெற்ற பிள்ளை தவிப்பானேன்
சீர்பூ த்தவுன் பாதம் சுப்பையா சேவைதந்து நீ அணைத்தீர் 21
வார்பூ த்த கொங்கையுமை வளர்த்த தயாநிதியே

இந்திரனிக்கேற்ற வனாய் சுப்பையா எண்ண முடியா திடர்கள்
தந்திமுகத்தெந்தை சகோதர தயாநிதியே
மாமலர்த் தாளுந்தொடர சுப்பையா மாட்டவினை விலகும் 22
பரமனாய லென்னாளும் எங்கள் பழனிமலை ஐயாவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கலிகாலத்திலும் சுப்பையா இங்கே உன்னைப்போலேது தெய்வம்
துக்கமெல்லாம் நீக்கி வெற்றிச் சூடும் தயாபரனே
சற்றமறிவில்லாத சுப்பையா சண்டாளனானாலும்
முற்றுமெனையாள்வாய் என்முருகா தயாபரனே 23

பக்தி சிறிதேனுமில்லா சுப்பையா பாவினானாலும்
சித்தியருளுமையா திருவே தயாபரனே
என்ன பிழை செய்தாலும் சுப்பையா இனிதாக நீ பொறுத்து
வர்ணமயிலேறி என்முன் வருவாய் தாயாநிதியே 24

வாராயோ மாமயிலில் சுப்பையா வந்து கலிதீர்த்து அருள்
தாராயோ தென்பழனி சுப்பையா சண்முக வேலாயுதனே
உன்னையன்றி வேறு சுப்பையா உலகிலெனக்குற்றதுணை
என்ன செய்வேன் தென்பழனி என்தாய் தாயாநிதியே 25

தீராத வல்வினையும் சுப்பையா தீர்த்துவிடு ஏழையர்க்கு
பாராததென்ன தண்டபாணி தயாநிதியே
என்பாவமதையகற்றி சுப்பையா எமை ஈடேற்ற வேண்டுமையா
அன்பாய்ச் சிவகிரி வாழ் அமர்ந்த தயாநிதியே 26

சூதுதான் கற்றனையோ சுப்பையா சும்மாயிருக்க நின்தன்
காதுதான் கேளாதோ கந்தா தயாநிதியே
பன்னிரெண்டு கண்ணிருந்தும் சுப்பையா பாராததென்ன என்தனையும்
உன்னிரண்டு பாதம் நம்பி யுற்றேன் தயாநிதியே 27

நீமனது வைத்தால் சுப்பையா நிரம்பாதுடலுமுண்டோ
தாமதங்கள் செய்யாமல் சுப்பையா தாவிவரவேணுமையா
ஆனாலுமிந்த சுப்பையா அநியாயம் உனக்காகாது 28
தேனார் கடம்ப மலர்மாலை அணி திண்புயனே

நல்லாதரவுடனே சுப்பையா நானும் உன்பாதம் கதி
அல்லாது வேறுளதோ உன் ஆசையெனக்கருள்வாய்
வல்லாது சொல்லுடைய சுப்பையா வயிரமெனும் நெஞ்சுடைய
கல்லோதான் உன்மனது கண்டிக் கதிர்காம வேலோனே 29

உந்தன் மலையேறச் சுப்பையா ஊட்டிவிடு தெம்பெனக்கு
வந்தாள்வாய் கந்தா வள்ளிதெய்வானையுடன்
அந்தமலை இந்தமலை சுப்பையா அண்ணாந்து பார்த்தமலை
கந்தர் இருக்கும் மலை கதிர்காம மாலையே 30

சுபம்

கதிர்காம மாலை முற்றிற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org